தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 149

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்..அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரு. 24—0—0
6 மாதம் ரு. 12—0—0
3 மாதம் ரு. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரு. 30—0—0
6 மாதம் ரு. 15—0—0
3 மாதம் ரு. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF : THE D.P.F.

சென்னை : கார்த்திகைமீ 19உ வெள்ளி (4—12—53) ★ ★ ★ வெளியூர் : கார்த்திகைமீ 20உ சனி (5—12—53)

தேர்தலில் காங்கிரஸ் தோல்வி!

பெருநிலக் கிழார்கள் ஆதரவும் செல்லாக் காசாயிற்று

யசோதா தேவி என்ற பள்ளி ஆசிரியை வெற்றிபெற்றார்!

ஜெய்பூர், டிச. 2—

ராஜஸ்தான் பான்ஸ்வாரா தொகுதிக்கு சட்ட சபை உப தேர்தல் நடைபெற்றது. அத் தேர்தலில் காங்கிரசின் சார்பில் நாத்வர் லால் என்பவரும், ஏழைப் பள்ளி ஆசிரியையான யசோதா தேவியும் போட்டியிட்டனர். காங்கிரஸ் அபேட்சகருக்கு 8 451 வாக்குகளும், பெண் அபேட்சகருக்கு 14,862 வாக்குகளும் கிடைத்தன 6000 வாக்குகள் அதிகம் பெற்ற சோஷலிஸ்டு அபேட்சகரான யசோதா தேவி வெற்றி பெற்றார்.

காங்கிரஸ் அபேட்சகரை பெருநிலக்கிழார்களும், கிராம அதிகாரிகளும் பலமாக ஆதரித்து வாக்காளர்களிடையே பிரசாரம் செய்தார்கள்.

வெற்றி பெற்ற யசோதா தேவி, அப் பகுதியில் வாழும் நாகரீகம் பெறாத யாவி பூர்வக் குடிகளின் குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்து வந்த ஏழை ஆசிரியை என்று தெரியவருகிறது.

துரோகத்துக்குப் பரிசு!

சென்னை, டிச. 3—

நகரசபை அண்மேயர் தேர்தலில், காங்கிரஸ் அபேட்சகர் ராமதாஸ் தோல்வியுற்றதற்குக் காரணம் ம. பொ. சிவஞானமே என ஐயுற்று, நகரசபை கல்விக் கமிட்டி தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

லண்டனில், 35,00,000 மக்கள் உடல் நலனுக்காக தேசிய சுகாதாரத் திட்டப்படி ஏப்ரல் முதல் அக்டோபர் வரை 51,58,269 பவுன் செலவிடப் பட்டுள்ளது

ஜாதி வெறி தலைக்கேறிய அவக்கேடர்!

மதுரையில் தோற்றார்! மதராசில் விளம்பரம் தேடுகிறார்!!

ஆச்சாரியார் பதவி நீடிக்க 'அனுதை'யின் பட்டினி!

சென்னை, டிச. 3—

சாகும்வரை பட்டினி இருக்கப் போவதாகக் கூறிக் கொண்டு, இராமனுசபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த எம். சுப்பிரமணியம் என்பவர், கோட்டைக்கு முன்னால் கொடிகாட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தார். பின்னர் அவர் இடத்தை மாற்றிக் கொண்டு மவுண்ட்ரோடு ராஜாஜி மண்டபத்தின் எதிரே பட்டினியிருப்பதாகத் தெரிகிறது.

ஆச்சாரியார் சர்க்காரை நீக்கும் முயற்சி கைவிடப்படும் வரையில் பட்டினி இருக்கப்போவதாக அவர் தூண்டு விளம்பரம் செய்திருக்கிறார்.

கோட்டைக்கு முன் பட்டினி இருந்தவர்களில் இவர் இரண்டாவது பேர்வழி. ஓமந்தூரார் காலத்தில் கணபதி ஐயர் என்றவர் 'நித்தியானந்த சரஸ்வதி' என பெயரிட்டுக் கொண்டு கோட்டைக்கு முன் கூடாரமிட்டார். முன்பொரு முறை மதுரையில் கலெக்டர் காரியாலய முன் பட்டினியிருந்து தோல்வி கண்டவர் இவர். இப்போது தோல்வியடைந்தாலும் வியப்படைவதற்கில்லை.

கயாறு விஷயத்தில் நேருபோக்கிற்கு பார்லிமெண்டு உறுப்பினர்கள் கேலி

அமெரிக்க சர்க்கார் சிக்கனம்!

நியூயார்க், டிச. 4—

அமெரிக்க சர்க்கார் தன் நிர்வாகச் செலவில் சிக்கனம் செய்ய உத்தேசித்துள்ளது 1954 ஜூன் 30-ந் தேதியுடன் ஆரம்பமாகும் நிதி ஆண்டில், 600 கோடி டாலர் மிச்சப்படுத்தப்படுமாம்.

அதுகண்டு பண்டிதர் ஆத்திரம்

புதுடில்லி, டிச. 4—

"பிரிட்டிஷ் கயாறுவில் சொந்த மக்களின் ஆட்சி பலவந்தமாய் பறிபட்டு, பிரிட்டனின் ஏதேச்சாதிகாரம் நடைபெறுகிறதே, இப்பிரச்சினை பற்றி ஐ. நா. பாதுகாப்பு சபையில் எழுப்புவது குறித்து இந்திய அரசாங்கம் ஏதேனும் ஆலோசனை நடத்துகிறதா," என்று பாராளுமன்ற கூட்டத்தில் ஒரு உறுப்பினர் நேருவைக் கேட்டதற்கு, "இப்பிரச்சினை ஆலோசனையில் இருக்கிறது," என்று நேரு பதிலளித்தார்.

நேருவின் இந்தப் பதிலுக்குப் பிறகு சபையில் சில உறுப்பினர் சிரித்தனர்

சிரிப்பொலியைக் கேட்ட நேரு உடனே எழுந்து சங்கடத்தோடு கூறியதாவது:—

"கயாறு சம்பந்தமான கேள்விக்கு நான் கொடுத்த பதிலைக் கேட்ட சில உறுப்பினர் சிரிக்

(2-ம் பக்கம் பார்க்க)

இந்தியா-ரஷ்யா உடன்பாடு

புதுடெல்லி, டிச. 3—

இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே வர்த்தக ஒப்பந்தம் நேற்று இருநாட்டுப் பிரதிநிதிகளாலும் கையெழுத்து இடப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தம் ஐந்தாண்டுகள் வரை அமுலில் இருக்கும் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது.

இருநாட்டுப் பிரதிநிதிகளும், சமஉரிமைக்கும், பரஸ்பர உதவிக்கும் உழைக்க சுயிபாத உழைக்கஉறுதிகொண்டுள்ளனர்.

வழக்கில் சிக்கியுள்ள தி. மு. கழகத் தலைவர்களுக்கு போலீஸ் சலுகையாம்!

5 போலீசார் தற்காலிகமாக நீக்கப்பட்டனர்

நெல்லை மாவட்டப் போலீஸ் அதிகாரியின் போக்கு

எட்டயபுரம், டிச. 2—

"போலீசு கான்ஸ்டபிள்களான பாலகிருஷ்ணன், குமாரவேல், தாண்டவமூர்த்தியா பிள்ளை, கருப்பசாமி, முத்திருளப்ப பிள்ளை ஆகிய 5 போகளும், தூத்துக்குடி சதி வழக்கில் கைது செய்யப்பட்டிருக்கும் தி. மு. கழகத் தலைவர்களை, இரவு நேரங்களில், சப்-ஜெயிலில், அல்லது போலீசு லாக்-அப்பில் வைக்காமல், அவர்கள் பிரியம்போல் தேவையான ஓட்டல்களுக்கு அழைத்துச் சென்றதற்கும், சட்டத்தை மீறி மிகச் சலுகைகள் கொடுத்ததற்கும், தூத்துக்குடி டேபுடி சூப்பிரண்டெண்ட் ஆப் போலீசு, மேற்கண்ட 5 போலீசாரையும் வேலையிலிருந்து தற்காலிகமாக விலக்கி, 'இம்மாதிரி நடந்துகொண்டதற்கு ஏன் வேலையிலிருந்தே நீக்கிவிடக் கூடாதென்பதற்குக் காரணம் காட்டவும்', என்று உத்தரவும் பிறப்பித்துள்ளார்.

ஜூலை 15-ந் தேதி, தூத்துக்குடியில், தி. மு. கழகத் தலைவர்களான கே. வி. கே. சாமி, தங்கப்பழம், சிவசாமி, நடராசன் உட்பட பலர் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது பாளையங்கோட்டையில் விசேட அடிசனல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் முன்பு வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

கைது செய்யப்பட்ட தி. மு. கழகத் தலைவர்கள் நாலவ... விசாரணை... சப்-ஜெயிலில் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

திருநெல்வேலியில் உள்ள சப்-மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இவர்களின் வழக்கு விசாரணை நடைபெறுவதால், ஒவ்வொரு வாய்தாவுக்கும் ஜெயிலிருந்து இவர்களை திருநெல்வேலிக்கு அழைத்துப் போவது வழக்கம்.

இம்மாதிரி 22—9—53 முதல் 21—10—53 வரை, மூன்று தடவைகள் விசாரணைக் குளத்திலிருந்து (22—9—53, 5—10—53 தேதிகளில் திருநெல்வேலி நீதிமன்றத்துக்கும் 19—10—53-ல் தூத்துக்குடி அடிசனல் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்துக்கும்) அழைத்துச் சென்ற போலீசு கான்ஸ்டபிள்

(2-ம் பக்கம் பார்க்க)

பம்பாயைத் தலைநகராகக் கொண்ட மராட்டிய அமைப்பு

'தனிநகர ஆட்சி ஏற்பாட்டை எவரும் ஏற்கார்'

மராட்டியர் ஒற்றுமையை குலைக்கவே 'மகாவிதர்ப்பம்' பேசப்படுகிறது

ஐதராபாத், டிச. 3—

"மராட்டிய மொழி பேசும் அனைத்து மராட்டிய மக்களையும் ஒன்றுபடுத்தி, பம்பாயைத் தலைநகராகக் கொண்டு சம்யுக்த மராட்டிர மாநிலம் அமைக்கப்பட வேண்டும்."

—இவ்வாறு, ஐதராபாத் மாநிலத்தில் உள்ள மகாராஷ்டிர மாவட்டத்தில் உள்ள காங்கிரஸ் தலைவர்களும் ஊழியர்களுமாகச் சேர்ந்து 150 பேர்கள், நாண்டெட் என்ற இடத்தில், ஒரு மாநாடு கூட்டி தீர்மானம் நிறைவேற்றினர். மாநாட்டிற்குத் தலைவராக இருந்தவர் ஐதராபாத் காங்கிரஸ் குழுத் தலைவரான சுவாமி ராமானந்த தீர்த்தராவர்.

(2-ம் பக்கம் பார்க்கவும்)

பாராளுமன்ற உறுப்பினர்கட்கு ஊதியம்

புதுடெல்லி, டிச. 2—

பார்லிமெண்ட் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியின் பரிசீலனையிலுள்ள ஒரு புதிய திட்டப்படி பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்கு மாதச் சம்பளமும் தினப்படியும் கிடைக்கலாம்.

மாதச் சம்பளம் ரூ 400-ம், சபை கூடியிருக்கையில் ரூ. 15 படியும் கொடுக்க ஏற்பாடு செய்வது திட்டத்தின் நோக்கம் எனத் தெரிகிறது.

அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு!

லண்டன், டிச. 4—

மார்ஷல் டிட்டோ 5310 கைதிகளுக்கு மன்னிப்பு அளித்திருக்கிறார். இவர்களில் அநேகர், அவருடைய அரசியல் எதிர்க் கட்சியினராவர். 188 கைதிகளுக்கு தண்டனை குறைக்கப் பட்டுள்ளது.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 4—12—1953 வெள்ளி

ராஜயோகியின் ரகளை!

பொதுவாக உயர் ஜாதி இந்துக்கள் என்று தங்களை சொல்லித் திரிபவர்களில் பெரும்பாலோருக்குள்ள ஜாதிப் பற்றை அனைவரும் அறிவர். குறிப்பாக பார்ப்பன மக்களின் ஜாதிப் பற்றும், ஜாதி வெறியும், நாட்டு வரலாற்றையே மாற்றி மாசுபடுத்திவிட்டதாக இருக்கிறது என்பது உலகறிந்த உண்மை. ஆச்சாரியார் போன்றவர்களுக்கே ஜாதிவெறி தலைவிரித்து ஆடுகிறது என்றால், அப்பாவிகளையும் ஆண்டிகளையும் எப்பொழுது வரும் என்று ஏங்கிக் கிடக்கும் ஆற்றல்களை அடிப்பவனிலை, அந்த ஜாதித் திமிர் பற்றிக் கொண்டிருக்காமலா விட்டுவிடும்?

அமைச்சர் ஆச்சாரியாருக்கு ஜாதி ஆணவம் உண்டா இல்லையா என்பது விவாதத்துக்கு உரிய விஷயமாக இன்று இல்லை. அந்த ஆரம்பக் கட்டம் மறைந்துபோய் நீண்ட காலம் ஆகிறது. வெறும் காங்கிரஸ் தலைவராக இருந்த காலத்திலும் சரி, அதிகாரத்தில் அமர்ந்திருந்த காலத்திலும் சரி, கனம் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் எப்பொழுதும் ஜாதி வெறியோடுதான் எதிலும் நடந்து வந்தார் என்பது அறிஞர்களால் ஒப்பமுடிந்த செய்தியாகும். சில நாட்களுக்கு முன்பு, தமக்குள்ள ஜாதிப் பற்றை ஆங்கிலோ இந்தியர் சங்கத்தில் பேசும்பொழுதும் தாமே ஒப்புக் கொண்டும் இருக்கிறார்.

தயவைவிட்டு இன்னமும் ஜாதிப்பற்றுத் தொலையவில்லை என்பதை அவரே பட்டவர்த்தனமாக ஒத்துக்கொண்ட பிறகும் கூட, தன் காரியத்துக்காக அவர் திருவடிகளைச் சுற்றித் திரிந்துகொண்டு கிடக்கிற போக்கிட மற்ற சில அரசியல் ஜந்துக்கள், அவரை 'சமத்துவ ஞானி' என்று கூசாமல் சலவடம் கட்டிக் கிளம்புகின்றன!

தங்கள் பொய்யுரைக்கு ஆச்சாரியாரின் திருமகள் கலப்பு மணத்தைக் காட்டி வாதிக்கின்றன! தென்னாட்டுக் காங்கிரஸில் அந்தக் காலத்தில் இருந்த பார்ப்பனத் தலைவர்கள் அனைவரும் பெறாத நிரசெல்வாக்கை, ஆச்சாரியார் மட்டும் அகில இந்தியக் காங்கிரஸில் எப்படிப் பெற முடிந்தது என்றுப் பூட்டைத் திறக்க வேண்டுமானால், ஆச்சாரியார் திருமகள் திருமணத்தைத்தான் திறவுகோலாகக் கொள்ள வேண்டும்! அரசியல் அக்கரையோடு வாழ்க்கை வரலாறு கற்றவர்களுக்கு, ஆச்சாரியாரின் அரசியல் ஆதிக்கக் 'கலப்பு மணத்தின்' இரகசியம் புரிந்துள்ள விஷயமேயாகும்!

அந்தக் கலப்பு மணந்தான் ஆச்சாரியாரின் அந்தஸ்தை அகில இந்தியத் தலைவர் நிலைக்கு உயர்த்திற்று என்ற உண்மை, அரசியல் அறிவு படைத்தவர்களுக்குச் சொல்லாமலே தெரியக்கூடிய விஷயமாகும். அரசியலிலே உலாவும் சில ஆடம்பரத் தேடிகளைப் போலத்தான், ஆச்சாரியாரும், இந்தக் கலப்பு மணத்தால் காங்கிரஸில் ஆதிக்கம் பெற்றார்; எல்லா அதிகாரங்களையும் பெற்றார்; அதிகாரம் பெற்ற காலங்களில் தனது ஜாதி ஆதிக்கத்தையும் வலுப்படுத்தினார்!

ஜாதி வெறியைத் துறந்து சமத்துவ வெயிலில் மனம் படிந்துவிட்டதாலேயே ஆச்சாரியார் 'கலப்பு மண'த்தைத் தன் மகளுக்கு நடத்தினார், கலப்பு மணத்தை ஆதரித்துப் பேசுகிறார் என்று சொல்வதற்கில்லை. ஆச்சாரியார் நடைமுறையை நோக்கும்பொழுது, அவரைப் பொறுத்தவரையில் 'கலப்பு மணம்' அவருடைய பேத புத்தியை, ஜாதி உணர்வைப் போக்கிவிட்டதாக எவராலும் நம்பவும் முடியாது, சொல்லவும் முடியாது. ஜாதி வெறியை முன் தள்ளி ஆச்சாரியார் புரியும் திருவிளையாடல்களுக்கெல்லாம், அவர் செய்துகொண்ட சொல்லப்படும் 'கலப்பு மணம்' ஒரு சிறந்த மூடுதிரையாக—முகமூடியாக—இருக்கிறது என்பதுதான் உண்மையாகும். நிற்க.

அவரிடம், பிறர்பால் காண முடியாத அபாரமான அறிவு ஆற்றலோ, அரசியல் தந்திரமோ, சமத்துவ எண்ணமோ இருப்பது உண்மையானால், பொதுவாகத் தமிழ் நாட்டிலும், குறிப்பாகச் சென்னை மாநிலத்திலும், அவருக்கு இவ்வளவு எதிர்ப்பு இருக்க வேண்டிய காரணமே கிடையாது. ஆனால் எந்தக் காங்கிரஸ் தலைவருக்கும் இல்லாத எதிர்ப்பு அவருக்கு இருந்ததையும், இருந்து வருவதையும் நாம் காண்கிறோம். இதற்கு அரசியல் பூர்வமான விளக்கம் கூற முடியாவிட்டாலும், அவரைப் பற்றித் தோதறிந்துக் கிடக்கும் ஓட்டைகளும் உடைசல்களும் ஒட்டிகள்!

அவரை அமைச்சர் பீடத்தில், நிரந்தரமாக நிலைபெறச் செய்ய எடுத்துக்கொண்ட பொய்ப் பிரசாரங்களும், எதிர்ப்பாளர்கள் விஷயத்தில் காட்டிய இருட்டடிப்புகளும், கோரிய பலனைக் கொடுக்கவில்லை என்பதை, அவர் ஆதரவாளர்கள் உணர்ந்து கொண்டனர்.

தம்மை எதிர்த்தவர்களை, தமது வாயில் வந்தபடி எல்லாம், தமது விருத்தாப்பியத்துக்கு மாறாக, சந்து மொழியிலெல்லாம் ஆச்சாரியார் சிந்து பாடினார். அதில் சிந்திய அலைகளைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு, அவர் 'ஆதரவுகள்' கூக்குரலிட்டன! அவ்வளவும், ஆதாரபூர்வமான தோல்வியைப் பெறும் நிலை பிறந்துவிட்டது.

இந்த உண்மையைத் தெரிந்து கொண்ட ஒரு 'ராஜயோகி' கிளம்பி இருக்கிறார், அரசியல் 'ராஜ குரு'வைத் தாங்கிப் பிடிக்க! சாகும்வரையில் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக ஒரு 'தேகம்' மவுண்ட் ரோடில் முன்னாள் கவர்னர் மாளிகை முன் உட்கார்ந்துகொண்டு சண்டித்தனம் செய்கிறதாம். கோட்டை வாயிலில் உண்ணாவிரதத்தைத் தொடங்கிய அந்தத் 'தேகம்', அந்த மக்களின் நடமாட்டம் குறைவாக இருக்கவே, அதிக ஜன நடமாட்டமுள்ள மவுண்ட் ரோடுக்கு 'கோதா'வை மாற்றிக்கொண்டு இருக்கிறது.

ராஜயோகியின் 'ஜாதி' எதுவாக இருந்தாலும் நமக்கு அக்கரை வேண்டாம். அரசியல் சட்டத்தில் குறித்துள்ளது போல 'இந்தியன்' என்றே கொள்ளுவோம்.

கல்லக்குடி அறப்போராட்டத் தலைவரான நண்பர் கருணாநிதியை, 'தற்கொலை' செய்து கொள்ள முயன்றார் என்ற சட்ட விதியைக் காட்டி, வழக்குத் தொடுத்து ஐந்து மாதக் காவல் தண்டனையை வாங்கித் தந்த ஆச்சாரியார் சர்க்கார், இந்த 'ராஜ யோகி'யின் தற்கொலை முயற்சியை ஏன் இன்னமும் விட்டு வைத்திருக்கிறது என்பதை, பொது மக்கள் அறிய ஆவல் கொள்ளுவதில் ஆச்சரியமில்லை.

எனவே, 'ராஜ யோகி'யின் தற்கொலை ரகளையை உடனே ஆச்சாரியார் சர்க்கார் தடுத்து நிறுத்த முன்வர வேண்டும், அதன் மீதும் சட்டப்படி வழக்குத் தொடுத்து, அதைக் கடுமையாக தண்டிக்கவேண்டும். அப்பொழுதுதான், அரசியலில் இதுபோன்ற ராஜயோகிகளின் ரகளைக்கு இடமில்லாமல் இருக்கும். ஆச்சாரியார் சர்க்கார் என்ன செய்கிறது பார்ப்போம்!

தூத்துக்குடி சதி வழக்கு நிதி உண்டியல் வசூல்

சென்னை மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில் 29—11—53-ல் நடைபெற்ற கருணாநிதி வரவேற்புக் கூட்டத்திலும், 30—11—53-ல் நடைபெற்ற தலைவர்கள் வரவேற்புக் கூட்டத்திலும் தூத்துக்குடி நிதிக்கென உண்டியல் மூலம் வசூலான தொகை, ரூ 255—1—0, தூத்துக்குடி சதிவழக்கு நிதியில் சேர்க்கப்பட்டுவிட்டது.

பம்பாயைத்.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநிலப் பிரிவினையைப் பற்றி விசாரணை செய்ய உருவாக்கப்பட இருக்கிற போர்ப்பால் குழுவிடம் மராட்டியரின் கோரிக்கையை வலியுறுத்த முன்னாள் ஐதராபாத் அமைச்சர் பூல்சந்த் காந்தியைத் தலைவராகக் கொண்ட குழுவொன்றை மாநாடு நியமித்தது. மகாராஷ்டிரா மாவட்டத்தில் உள்ள காங்கிரஸ் செயலாளர், தாலூகா செயலாளர்கள், சட்டசபை உறுப்பினர்கள், பார்லிமெண்டு உறுப்பினர் ஆகிய முக்கியஸ்தர்கள் அனைவரும் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

6 கோடி மக்களைக் கொண்டிருக்கும் சம்யுக்த மகாராஷ்டிர மாநிலப்பற்றில் 6 கோடி மக்களைக் கொண்ட உத்திரப்பிரதேச அமைப்புக்குக் கூடுதலாக இருக்காது என்றும், தனித்த மராத்வதா அல்லது மகாவிதர்ப்ப மாநிலம் அமைக்க வேண்டும் என்று சிலர் கூறுவது, செயலளவில் மராட்டிய மொழியினரைப் பிளவுபடுத்தி விடக்கூடும் என்றும், மாநாட்டின் பொறுப்பாளர் திருடாங்கரிஞர்

மராட்டியத்துடன் ஒன்றியிருக்கிற பம்பாய் நகரம் மராட்டிய மாநிலத்துடன்தான் சேரவேண்டும் என்றும், குறிப்பிட்ட ஒரு நகரை ஒரு தனி ஆட்சி நகரமாக ஆக்கவேண்டும் என்பதைப் பெரும்பான்மையோர் ஒப்புக்கொள்ளவில்லை என்றும், தெலுங்கானாவைச் சேர்ந்த ஐதராபாத் நகரை மராட்டியர்கள் உரிமை பாராட்டுவது கூடாது என்றும், மாநாட்டினர் முடிவிற்கு வந்தனர்.

மராத்வதாவில் உள்ள நகர நிறுவனங்கள் அனைத்தும் பம்பாயைத் தலைநகராகக் கொண்ட மராட்டிய மாநிலம் வேண்டும் என்று வலியுறுத்தித் தீர்மானங்கள் போடவேண்டும் என்று மாநாட்டினர் வேண்டிக்கொண்டனர்.

மற்ற மாவட்டங்களைப்போல் அல்லாமல் பின்னணியில் இருக்கும் மராத்வதா மாவட்டத்தை முன்னேற்ற இதுவரை ஐதராபாத மாநில அரசு முன்வரவில்லை என்றும், சம்யுக்த மராட்டியம் அமைந்தால், அந்தப் பிற்போக்கை விரைவில் களைய வழி பிறக்கும் என்றும் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

கயானா விஷயத்தில் நேரு போக்......

ஈரோட்டில் தலைவர்கள்

★

7—12—53 திங்கள் மாலை 7 மணிக்கு, ஈரோடு பார்க் ரோடு பெரியார் மைதானத்தில் தோழர்கள் அண்ணாதுரை, சம்பத், நெடுஞ்செழியன், நடராசன் ஆகியோர்களுக்கு வரவேற்புப் பொதுக் கூட்டம் நடைபெறும்.

சுற்று வட்டாரங்களிலுள்ள கிளைக் கழகத் தோழர்கள் வரவேற்பிலும், பொதுக்கூட்டத்திலும் கலந்துகொள்ளும்படி செயலாளர் எஸ். ஆர். சந்தானம் கேட்டுக்கொள்ளுகிறார்.

திருச்சி தோழர்கள் சிறை புகுந்தனர்

திருச்சி, டிச. 4—

திருச்சி, மலைக்கோட்டை தி. மு. கழகத் தோழர்கள் மீது போலீசாரால் தொடரப்பட்ட வழக்கு, இதுவரை எட்டு வாய்தாக்களுக்குப்பின், 2—12—53-ல, தோழர்களுக்கு தலா ரூ 20 அபராதமும், தவறினால் ஒரு வார சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. தோழர்கள் அருணகிரி, வெ. பஞ்சாபகேசவன், ரா. முத்துசாமி, ரெ. கிருட்டிணமூர்த்தி, கி. நாராயணன், சொ. கிருட்டிணமூர்த்தி, சி. கலியாணசுந்தரம் ஆகியோர் அபராதம் கட்ட மறுத்ததால், இன்று பகல் 12-15 மணிக்கு திருச்சி சப்-ஜெயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவ்வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள மலைக்கோட்டை தி. மு. கழக கிளைக் கழகத் துணைச் செயலாளர் தோழர் டி. எம். ரத்தினம், டி. எ. கமலன் ஆகியோர் வழக்கு 9—12—53-ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அச்சாரம் பெற்று 'அங்கு' போயிருக்கிறார்!

சென்னை, டிச 4—

சென்னை முதலமைச்சர் ஆச்சாரியார் மீது நம்பிக்கையில்லை என்று கூறும் மனுவில் கையெழுத்திட்ட சட்டசபை உறுப்பினர்கள் கையொப்பமிட்டு காமராஜிடம் கொடுத்தாகிவிட்டதென டாக்டர் வரதராஜுலு நாயுடு நேற்று நிருபர்களிடம் கூறினார்.

அந்த மனு டில்லியில் நேருவின் பார்வைக்கு வைக்கப்படும். காமராஜர் விமான மூலமாக நேற்று டில்லிக்குப் பயணமானார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறினர்; இச்சிறிய, கயானாவின் உயிர்ப் பிரச்சினையையே கையாண்டு செய்வதாகும். கையாண்டு செய்கிற அளவுக்கு கயானாப் பிரச்சினையை உறுப்பினர்கள் கருதவதறிந்து மனம் நைகிறேன்.

"கையாண்டு செய்து சிரிப்பதற்குரிய அளவுக்குக் கயானாப் பிரச்சினை மோசமானதல்ல; அது அழுத்தமாய்க் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும். கயானாவின் இன்றைய நிலை மிக மிக மோசமடைந்திருக்கிறது.

"அங்குள்ள நிலைகளைத் தருவி ஆராயமுன், இந்திய அரசாங்கம், உறுப்பினர்களின் கேள்விகளுக்காக எதையேனும் சொல்லி வைப்பது பொறுப்பைக் கடந்ததாகும்."

பாராளுமன்றச் செயலாளர் சதாட் அலிகான், ஆரம்பத்தில் எச். என். முகர்ஜியின் கயானா பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"1951-ல் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்குப்படி, கயானாவில் உள்ள மக்கள் தொகை 437 ஆயிரம்; இதில், 197, 696 பேர் இந்தியர்கள். பிரிட்டிஷ் கயானாவின் மக்கள் தொகையில் இந்தியர்தான் அதிகம். இதற்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையுடையோர்கள் ஆப்பிரிக்கர்கள். அந்த சமீபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் சாதாரணமானதல்ல என்பதை அரசாங்கம் அறியாமலில்லை.

அங்குள்ள மக்களில் இந்தியர்கள்தான் அதிகம் என்றாலும் அவர்கள் இந்தியர்கள் அல்ல; ஆகவே அதுபற்றி எடுக்கப்படும் நடவடிக்கைகள் நடப்பின் தன்மையைப் பொறுத்ததாகத்தான் இருக்க வேண்டும்."

"பிரிட்டன் கயானா பிரச்சினையை, ஐ. நா. பாதுகாப்பு சபையில் அக். 15-ல், போலந்து—கௌதமாலாப் பிரதிநிதிகள் எழுப்பியபோது இந்தியப் பிரதிநிதி ஏன் சும்மா இருந்தார்?" என்று கேட்கப்பட்டது.

இதற்கு, நேரு அளித்த பதில் அளிக்கையில் "அந்தச் சமயத்தில, இந்தியப் பிரதிநிதிக்கு கயானாவின் நடப்பு பற்றிய விவரம் அறிவிக்கப்படவில்லை; அதனால் அவர் சும்மா இருந்துவிட்டார்," என்று கூறினார்.

வழக்கில் சிக்கி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களான பாலகிருஷ்ணன், குமாரவேல், தாண்டவமூர்த்தியா பிள்ளை, கருப்பசாமி, முத்திருளப்ப பிள்ளை ஆகிய 5 பேர்களும், அவர்களை சப்-ஜெயிலில் அல்லது லாக்-அப்பில இரவு நேரங்களில் வைக்காமல, அவர்கள் பிரியம்போல் தேவையான ஓட்டல்களுக்கு அழைத்துச் சென்றதற்கும், சட்டத்தை மீறி மிகச் சலுகைகள் கொடுத்ததற்கும், தூத்துக்குடி டெபுடி சூப்பிரண்டெண்ட் ஆப் போலீசு, மேற்கண்ட 5 போலீசாரையும் தற்காலிகமாக வேலையிலிருந்து விலக்கி, 'இம்மாதிரி நடந்து கொண்டதற்கு அவர்களை ஏன் வேலையிலிருந்தே நீக்கக் கூடாதென்பதற்குக் காரணம் காட்டவும்' என்று உத்திரவு பிறப்பித்துள்ளார்.

வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தப்பட்ட போலீசார் 5 பேரும், தங்களிடமிருந்த அரசாங்கச் சொத்துகளை இன்று போலீசு அதிகாரிகளிடம் ஒப்படைத்தார்கள்.

தூத்துக்குடி சதி வழக்கு:

‘என் குடும்பத்தினர் காங்கிரஸ் பற்று கொண்டவர்!’

‘தி. மு. கழகத்தை நான் தீவிரமாக ஆதரித்துவந்தேன்’

‘ஆனால் அக்கழகத்தின் நிர்வாகிகளைத் தெரியாது!’

திருநெல்வேலி, டிச 3—

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை, நேற்று மீண்டும் விசேஷ மாஜிஸ்திரேட் திரு எஸ். அரிகர அய்யர் முன் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சமி னூர் பண்ணையார் மூன்றாவது பிராசிகியூஷன் சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

“தூத்துக்குடியில் நான் அரிசி வியாபாரம் செய்து வருகிறேன். திராவிடக் கழகத்திடம் எனக்கு அனுதாபம் உண்டு. கடந்த ஜூலையில், தி. மு. கழகம் டிரெயின்களை நிறுத்தியது எனக்குத் தெரியும். ஜூலை 15-ந் தேதி டிரெயின்களை நிறுத்த முடிவு செய்யப்பட்டது.

“ஜூலை 14-ந் தேதி இரவு 8 மணிக்கு தி மு கழகத் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. நான், அங்கு என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கச் சென்றேன். சாரப்பேட்டை தெரு சமீபத்தில் நாகம்மாள் நினைவு வாசகசாலை மேல் மாடியில் 30 பேர்கள் கூடியிருந்தனர். அங்கு கே. வி. கே. சுவாமி, நடராசன், ரத்தினம், தங்கப்பழம், சிவசுவாமி ஆகியோர் இருந்ததைப் பார்த்தேன். இவர்கள் தி. மு கழகத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள். டிரெயின்களை நிறுத்த வேண்டுமென்றும், ரயில்வே பாலத்திற்குத் தீ வைக்க வேண்டுமென்றும், பிராம்மணர்களின் வீடுகளைக் கொள்ளையடிக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது கே. வி. கே. சுவாமியும், ரத்தினமும் கூட்டத்தில் பேசினர். மற்றும் மூவர், அவர்கள் பேசியதை ஆமோதித்தனர். கூட்டத்தில் சிலர் இதை ஏற்காததால், கீழே இறங்கி விட்டனர். நானும் அவர்கள் கூறியதை ஏற்கவில்லை என்னுடன் வெங்கடசாமி நாயுடுவும், கோதண்டராம பண்ணையாரும் வெளியே வந்து விட்டோம்.

“மறுதினம் நான் அரிசி வாங்குவதற்குப் புதுக் கிராமம் கூட்டுறவு ரேஷன் கடைக்குச் சென்றேன், சில வீடுகளும், ரேஷன் கடைகளும் மூடப்பட்டிருந்தன காரணம் என்ன என்று வினவினேன்.

“விக்டோரியாஎக்ஸ்டென்ஷன் ரோடிலிருந்து புதுக் கிராமத்துக்கு ஒரு கூட்டம் ஓடி வந்ததை பார்த்தேன். ‘ராஜாஜி சர்க்கார் ஒழிக,’ ‘நேரு சர்க்கார் ஒழிக,’ ‘பிராமணர்கள் ஒழிக’’ என்ற கோஷங்களை எழுப்பிக்கொண்டு, சுமார் 30 பேர் ஓடி வந்தனர். அவர்களிடம் அரிவாள்கள், தடிகள் ஆகியவைகள் இருந்தன. வீடுகள் மீது கூட்டத்தினர் கற்களை வீசினர். அதே சமயத்தில் 10 அல்லது 15 பேர் கொண்ட கூட்டம் வடக்கிலிருந்து வந்தது. அவர்களிடம் ஆயுதங்கள் இருந்தன. முதலில் வந்த கூட்டம் வடக்கிலிருந்து வந்தது; இரண்டாவது வந்த கூட்டம் தெற்கிலிருந்து வடக்கே வந்தது. இவர்கள் பெருமாள் கோவில் அருகே சந்தித்தனர் எல்லோரும், மேற்குத் திசையில் சென்றனர். சங்கர நாராயணன் என்ற பிராமணச் சிறுவன், இரு கைகளிலும் வெட்டுக் காயங்களுடன் இருந்ததைப் பார்த்தேன் கட்டுக் கட்டப்பட்டு ரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது.

“இம்பீரியல் பாங்கி காஷியர் வீட்டின் மீது கூட்டத்தினர் கற்களை வீசினர். வீட்டுக்குள் நுழைந்து, படங்களையும், போட்டோக்களையும் உடைத்தனர். பிறகு அவர்கள் ராதாகிருஷ்ணய்யர் கார் ஷெட்டுக்குள் புகுந்து, கண்ணாடிகளை உடைத்தெறிந்தனர். பிறகு கூட்டத்தினர் ஸ்வாமி குளத்து அய்யர் வீட்டுக்குள் புகுந்தனர். சுமார் 20 அல்லது 25 பேர் வீட்டுக்குள் புகுந்து பிறகு வெளியேறினர். பிறகு கிழக்குத்திசையில் கூட்டம் சென்றுவிட்டது. நான் லிங்கபுரத்தில் உள்ள வீட்டிற்குத் திரும்பினேன். 20 நாட்கள் கழிந்து போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டரால் விசாரிக்கப்பட்டேன்.”

“தூத்துக்குடி சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் புதுக்கிராமத்தில் கூடியிருந்த கூட்டத்தில் சிலரை சாட்சி அடையாளம் காட்டினார். இந்தக் கோர்ட்டிலும் சாட்சி முதல் எதிரியையும், மற்றவர்களையும் அடையாளம் காட்டினார்.

குறுக்கு விசாரணை

எதிர்தரப்பு வக்கீல் திரு செல்லப்ப பிள்ளை குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சி கூறியதாவது:—

“நாகம்மாள் வாசகசாலை, என் வீட்டிலிருந்து கால் மைல் தூரத்தில் இருக்கிறது. நான் புவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவன் என்று கூறுவது சரியல்ல; நேதாஜி சங்கத்தையும் சேர்ந்தவனல்ல.

“என் குடும்பத்தினர் காங்கிரஸ் கட்சியினிடம் அனுதாபம் கொண்டவர்கள்”

“முதல் எதிரி முதல், 5-வது எதிரிகள் தூத்துக்குடியில் முக்கியஸ்தர்கள் முதல் எதிரி கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்டார். அவர் தொழிலாளர் தலைவருமாவார் இரண்டாவது எதிரி அரிசி வியாபாரி என்பது எனக்குத் தெரியும். 3-வது, 5-வது எதிரிகள் தூத்துக்குடி முனிசிபல் கவுன்சிலர்களாவர்.

“தி. கழகம், தி. மு. கழகம் என்ற இரண்டு கட்சிகள் உண்டு. இக்கட்சிகளின் காரியாலயங்கள் எங்கிருக்கின்றன என்பது எனக்குத் தெரியாது. நிர்வாகிகள் யார் என்பதும் தெரியாது

தி. மு. கழகத்தின் சில லட்சியங்களை நான் விரும்புகிறேன். கடந்த ஒரு வருடமாக புதுக் கிராமம் கூட்டுறவு ஸ்டோரில் வேலை செய்கிறேன். நான் தற்போது அங்கு வேலையில் இல்லை அதன் பெரும்பாலான டைரக்டர்கள் புதுக் கிராமத்தில் வசிக்கும் பிராமணர்களே ஆவர்.

“கூட்டுறவு சங்க பிராம்மண டைரெக்டர்கள் தூண்டுதலால், நான் இங்கு சாட்சியம் கொடுப்பதாகக் கூறுவது தவறு”

“முதல் எதிரி முதல் 5 எதிரிகள் வரை தி மு. கழகக் கட்சித் தலைவர்கள் என்பது எனக்குத் தெரியும் எப்பொழுது முதல் எதிரி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது எனக்குத் தெரியாது

“போலீஸ் ஸ்டேஷனில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார் அப்போது இதர போலீஸ் அதிகாரிகளும் பிரசன்னமாயிருந்தனர். போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டரைத் தவிர்த்து வேறு யாரிடமும் கூட்டம் பற்றி பிரஸ்தாபிக்கவில்லை.

“புதுக் கிராமத்தைச் சேர்ந்த சில பிராம்மண சிறுவர்களை எனக்குத் தெரியும். கூட்டுறவுப் பண்டகசாலையில் வேலை செய்கையில் அவர்களுடன் எனக்குத் தொடர்பு உண்டு. காயங்களுடன் சங்கர சுப்பிரமணியனைப் பார்த்தபோது, நான், அவனை நெருங்கவில்லை. ஏனெனில், காயங்களுடன் அவன் ஓடிக்கொண்டிருந்தான். பிறகு இப்பையனைச் சந்தித்தேன் காயங்கள் பற்றி அவனுடன் பேசவில்லை.”

“நாகம்மாள் வாசகசாலையில் நடைபெற்ற கூட்டத்திற்கு நான் அழைக்கப்படவில்லை அங்கு என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கச் சென்றேன் மாடிப்படியில் நின்றுகொண்டு அவர்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டேன். போலீசாருக்குத் தெரிவிக்கு முன்பே டிரெயின்களை நிறுத்த வேண்டுமென்று அவர்கள் முடிவு செய்தனர். போலீசார் இம்சித்தால் ரயில்வே பாலத்திற்குத் தீயிட வேண்டும் என்றும் அவர்கள் முடிவு செய்தனர். புதுக்கிராம பிராம்மணர்களைக் கொள்ளையிட வேண்டுமென்றும் அவர்கள் தீர்மானித்தனர். அப்போது என் போன்ற தி மு. கழக அனுதாபிகள் அங்கு பிரசன்னமாயிருந்தனரா என்பது பற்றி எனக்குத் தெரியாது.”

• • •

திரு. வி என். கந்தையப் பிள்ளை விசாரிக்கையில் சாட்சி கூறியதாவது:—

தி மு. கழக லட்சியங்களை நான் அங்கீகரிக்கிறேன். அன்றிரவு கட்சியின் மேற்படி தீர்மானம் தெரிந்தவுடன் நான் அக்கட்சியிடம் அனுதாபம் காட்டுவதை நிறுத்தி விட்டேன்.

“சம்பவம் நடந்ததற்குப் பிறகுகூட போலீசுக்கு விஷயத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றவில்லை.”

“இதற்கு வேறு எவ்வித குறிப்பிட்ட காரணமும் கிடையாது. நான் பொதுக்கூட்டம் எதிலும் கலந்து கொள்வது கிடையாது. எவ்விதம் தீர்மானம் நிறைவேற்றப்படும் என்பதும் எனக்குத் தெரியாது. ஜூலை 12-ந் தேதி தி. மு கழகக் கூட்டம் நடைபெறப் போவதைச் சுவரொட்டிகளிலிருந்து தெரிந்து கொண்டேன். நான் அக்கூட்டத்திற்குச் செல்லவில்லை”

* * *

திரு. வி. என். கந்தப்பா குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சி கூறியதாவது:—

“நான் திருச்செந்தூரைச் சேர்ந்தவன், 12 வருடங்களுக்கு முன் தூத்துக்குடிக்கு வந்தேன்.

*

அடுத்தபடியாக 4-வது பிராசிகியூஷன் சாட்சியாக வெங்கடசாமி நாயுடு விசாரிக்கப்பட்டார் அவர் கூறியதாவது:—

“நான் புதுக்கிராமத்தில் வசித்து வருகிறேன். தூத்துக்குடியில் நான் கொல்லத்து வேலை செய்துவந்தேன்.

“கடந்த 2 வருடங்களாக தி. மு கழகத்திடம் அனுதாபம் காட்டி வந்தேன்.”

“ஜூலை 14-ந் தேதி நான் கடைக்குச் சென்று சாரப்பேட்டை தெருவழியாக திரும்பி வந்து கொண்டிருந்தேன். நாகம்மாள் நினைவு வாசகசாலை முன் ஒரு கூட்டம் கூடியிருந்ததைப் பார்த்தேன். ராஜாஜி கொண்டு வந்த புதுக் கல்வித் திட்டம் எதிர்க்கப்படப் போவதாக நான் விசாரித்துத் தெரிந்துகொண்டேன். வாசகசாலையின் மேல் மாடிக்குச் சென்றேன்; அங்கு 20 பேர்கள் கூடியிருந்தனர். முதல் எதிரி முதல் 5 எதிரிகள் வரை அங்கு இருந்தனர். புதுக் கல்வித் திட்டத்தை எதிர்க்க வேண்டுமென்று முதல் எதிரி கூறினார். எதிர்ப்புக்கு அறிகுறியாக டிரெயின்களை நிறுத்த வேண்டுமென்றும், போலீசார் இம்சித்தால் புதுக்கிராமத்தில் உள்ள பிராம்மணர்கள் வீடுகளைக் கொள்ளையிட வேண்டுமென்றும் அவர் கூறினார் தீர்மானத்தை மற்றமுள்ள 4 பேர் ஆதரித்தனர் பிறகு தொண்டர்களின் பெயர்களை திரட்ட விரும்பினர்.

“நான் இத்தீர்மானத்தை ஆதரிக்கவில்லை யாதலால் கீழே இறங்கிவந்து விட்டேன்.”

“இது சம்பந்தமாக போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்”

நடராசனைத் தவிர மற்ற 4 பேர்களையும் கோர்ட்டில் சாட்சி அடையாளம் காட்டினார்.

குறுக்கு விசாரணை

எதிர் தரப்பு வக்கீல் திரு பி. ஏ. தங்கமணி நாடார் குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சி கூறியதாவது:

“வாசகசாலையில் நடந்த கூட்டத்தில் 5-வது எதிரி நடராசனைப் பார்த்தேன். முதல் எதிரிமுதல் 4 எதிரிகளையும் பார்த்தேன். எதிரிகளைப் பார்ப்பதற்கு முன்பும், பிறகும் நான் தி. மு. கழகக் கட்சி மெம்பராக யில்லை.”

“திராவிடக் கழகம், காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்டு கட்சி இவற்றின் கூட்டங்களுக்குச் செல்வதில்லை. இக்கட்சிகளின் இலட்சியங்களும் எனக்குத் தெரியாது தி. மு. கழகக் கூட்டங்களுக்குச் சென்றிருக்கிறேன்; ஆனால், தி மு கழகக் கமிட்டிக் கூட்டங்களுக்குச் சென்றது கிடையாது. 3 அல்லது 4 தடவை தி. மு கழகக் கட்சிக் கூட்டங்களுக்குச் சென்றிருக்கிறேன்.

முதல் எதிரி கூட்டங்களில் பேசுவதையும் பார்த்திருக்கிறேன், 2வது எதிரியையும் பார்த்திருக்கிறேன். தி மு கழகக் கட்சிக்குத் தொண்டர்களை திரட்டப்படுவதாகக் கருதி, நான் வாசகசாலைக்குச் சென்றதை சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் கூறியிருக்கிறேன. கூட்டத்திற்குச் சென்ற பிறகுதான் கட்சியின் நோக்கம் தெரியவந்தது. மாடிப்படியில் என்னுடன் கோதண்டராம பண்ணையார் நின்று கொண்டிருந்ததாக எனக்கு ஞாபகமிருக்கிறது சாட்சிகள் சமினூர் பண்ணையாரும், கோதண்டராம பண்ணையாரும் மேற்படி தீர்மானம் பற்றி விவாதித்தனர். டிரெயின்களை நிறுத்துவது நேர்மையல்ல என கோதண்டராமபண்ணையார் கூறினார். பிறகு அவர்கள் கலைந்து சென்றனர். புதுக்கிராம மக்கள் தூண்டுதலின் பேரில் நான் இங்கு சாட்சியமளிக்கவில்லை.”

* * *

திரு செல்லப்ப பிள்ளையால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் சாட்சி கூறியதாவது:—

“நான் புதுக் கிராமத்தில் உள்ள இம்பீரியல் பாங்கி காஷியர் வீட்டு காம்பவுண்டுக்குள் வசிக்கிறேன். சம்பவம் நடந்த பிறகு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்.

* * *

திரு பி. என். கந்தப்பபிள்ளை குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சி கூறியதாவது:—

“2 அல்லது 3 ஆண்டுகளுக்கு முன் தூத்துக்குடிக்கு வந்தேன். தி மு. கழகக் கட்சியிடம் எனக்கு அனுதாபம் உண்டு.

“தி. மு. கழகக் காரியாலயம் எங்கு இருக்கிறது, அதன் நிர்வாகிகள் யார் என்பது எனக்குத் தெரியாது. கூட்டத்தில ஏற்பட்ட முடிவை காஷியர் அய்யங்காரிடம் கூறவில்லை. ஏனெனில், நான் அவரை அபூர்வமாகத்தான்சந்திப்பதுண்டு. என்னை ஒருவாரம் கழித்து சர்க்கிள் இன்ஸ்பெக்டர் விசாரித்தார்.”

திருக்குறள் வகுப்பு

சென்னை, டிச 4—

“சென்னை, புரசை, கங்காதீஸ்வரன் கோவில் தெரு, நகராண்மைக் கழக ஆண் பள்ளியில், குறள் நெறிக் கழகச் சார்பில், ஒவ்வொரு ஞாயிறு காலையும், 9-மணிக்கு திருக்குறள் வகுப்பு நடைபெறும்.

முதல் வகுப்பு 6—12—53 ஞாயிறு காலை 9-மணிக்குத் துவங்கும் தோழர் க. அன்பழகன் எம். ஏ. வகுப்பைத் துவக்கி வைப்பார். புலவர் ஏ. கே. வேலன் வகுப்பு நடத்துவார். அனைவரும் வருக, எனக் குறள் நெறிக் கழகச் செயலாளர் எழுதுகிறார்.

கல்கத்தா, டிச. 4—

இந்தியாவின் சணல் பொருள்களுக்கு—முக்கியமாக கோணிப் பைகளுக்கு ரஷ்யாவிடமிருந்தும், ஆஸ்திரேலியாவிடமிருந்தும் அதிக கிராக்கி இருந்து வருகிறது.

சேலம் மாவட்ட தி. மு. க. நிதிக்காக

6—12—1953 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு

சேலம் விக்டோரியாவில்

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்

குழுவினரின்

இன்பக் கனவு

நாடகம் நடைபெறும்

எம். ஜி. சக்ரபாணி, எம். கே. முஸ்தபா, என். எஸ். நாராயணன், ஜி. சகுந்தலா, சுலோசனா

மற்றும் பலர் நடிக்கின்றனர்

கழகத் தோழர்களின் கருத்துக்கு விருந்து!

நாடக ரசிகர்களுக்கு நல்லதோர் வாய்ப்பு!!

கட்டணம்: ரூ. 5, 3, 2, 1, அணா 8

அமைப்பாளர்கள், கீபஜார், சேலம்

காஞ்சியில் தலைவர்கள்: வரவேற்பு விவரம்

1-12-53 மாலை 5-30 மணிக்கு காஞ்சீபுரம் கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில் மாநாடு அமைப்பு போல் அமைக்கப்பட்டிருந்த அழகிய மேடையில் தலைவர்கள் சி. என். அண்ணாதுரை, இரா நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், என். வி. நடராசன் ஆகியவர்கள் மேடைக்கு வந்ததும் பல்லாயிரக் கணக்கிலே குழுமியிருந்த ஆண்களும், பெண்களும் கையொலி தட்டி அன்புடன் வரவேற்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகவும், காஞ்சி நகரத்தில் ஒரு பெரும் விழாவாகவும் இருந்தன.

தோழர் கே. டி. எஸ். மணி அவர்கள், தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்களை தலைமை பேறும்படி முன்மொழிய, தோழர் அரங்கண்ணல் வழிமொழிய தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் வரவேற்பு விழாவிற்குத் தலைமை தாங்கி சொற்பொழிவாற்றினர்.

பின்னர் தலைவர்களைப் பாராட்டி, தோழர்கள் எஸ் தெய்வசிகாமணி, சி. வி. இராசகோபால், அன்பில் — தர்மலிங்கம், அ. பொன்னம்பலனார், சி. வி. எம். அண்ணாமலை ஆகியவர்கள் பேசினர்.

பின்னர், செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக சார்பிலும், நகர தி. மு. கழகம், அறிவு வளர்ச்சிக் கழகம், மறுமலர்ச்சிக் கழகம், அழகிரி நினைவு மன்றம், திருமழிசை தி. மு. கழகம் ஆகியவற்றின் சார்பில் வரவேற்பு இதழ் வாசித்தளித்து தலைவர்களுக்கு மலர்மாலை சூட்டினர்.

பின்னர், பரந்தூர், அய்யம்பேட்டை, வாலாஜாபாத், குன்றத்தூர், மதுரமங்கலம், உத்திரமேரூர், மாளுமதி, ஓரகடம் தி. மு. கழகங்கள், பகுத்தறிவு கழகம், மஜீத் நினைவு மன்றம், தியாகராயர் மன்றம், சிந்தனையாளர் கழகம், அரங்கசாமி நினைவு மன்றம், புதுப்பாளையத் தெரு தி. மு. கழகம், சண்முகம் நினைவு மன்றம், வேலாயுதம் படிப்பகம், கருணாநிதி படிப்பகம், பாண்டியன் நினைவு மன்றம், பன்னீர்செல்வம் படிப்பகம் ஆகிய கிளைக் கழகங்களின் சார்பிலும், மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பின்னர் காஞ்சீபுரம் நகர சீர்திருத்த கழகத்தின் சார்பில் தோழர் செல்வராஜ், வாலாஜாபாத் பஞ்சாயத்து போர்டு சார்பில் தலைவர் தணிகாசலம் ஆகியோரால மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பிறகு, தோழர்கள் புட்டாசாமியின் மகன் தலைவர்களுக்கு சரிகை மாலையும், நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி, சுவரன் பாக்குத்தூள் ஏஜெண்ட் சி. டி. கிருட்டிணன் கந்திரி தெரு வரதன், திருவேகம்பன் தெரு அக்கணம் பாளையத் தெரு, கீழ கதர்பூர் தி.மு.க தோழர்களும், தோழர் கோபால், செல்லை முரசொலி பதிப்பகம், சிங்காடிவாக்கம் சிவஞானம், காஞ்சு குமரன் அண்டு கோ, ஆர். வேணுகோபால், இப்ராகிம், திருக்காலிமேடு தி. மு. கழகத் தோழர்கள் மிலிட்டரி ஓட்டல் மன்சூர், எஸ். எம். அப்துல்காதர், தாமல் தி. மு. கழகத் தோழர்கள் வேலூர் இராசமாணிக்கம், வி கச்சபாலையம், (பிஸ்கட்) நடேசனார் தறி கண்ணன் டாக்கீஸ் உரிமையாளர் எ. பி. கண்ணபிரான், ஆர். பாபு. டி. எம். பி. தண்டபாணி மூர்த்தி (பச்சையப்ப முதலியார் அண்டு சன்ஸ்), ராஜா பட்டு தொழிலாளர்கள், மாடர்ன் ரேடியோ சர்வீஸ், ராமலிங்கம் ஆகியவர்களாலும், வெளியூர் தி. மு. கழக அனுதாபிகள், மற்றும் பலராலும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

[illegible]

காக செங்கற்பட்டு மாவட்ட சார்பில், ரூ 2,000 கொடுக்க முடிவு செய்திருப்பதாகத் தோழர் சி வி எம். அண்ணாமலை மேடையில் குறிப்பிட்டதின் காரணமாக ராஜாஜி சந்தை தி. மு. கழக அனுதாபிகளால் 14-10-4, விளக்கடி கோயில் தெரு, தி. மு. கழக அனுதாபிகளால் 10-0-3ம், கருணாநிதி படிப்பகத்தின் சார்பில் ரூ. 2—0—0ம், தோழர் மன்னாரால் ரூ 4-ம். தோழர் சி. டி. கிருஷ்ணன் 101 காலணாக்களும், மாளுமதி அழகானந்தம் ரூ. 1, கோலார் தி. மு. கழகம் ரூ 1, மாளுமதி வெள்ளையப்பன் ரூ. 1, ஐயம்பேட்டை உடற்பயிற்சி கழகம் ரூ 1, அம்பிகா சரி டிபோ ரூ 1, திருவத்திபுரம் தி மு கழகம் ரூ 2, ஆகியவர்கள் மாவட்ட செயலாளரிடம் நன்கொடை அளித்தனர்.

பின்னர் தோழர் என். வி நடராசன் பேசுகையில், அண்ணாவின் ஆணைப்படி கடமையுணர்ச்சியோடு கண்ணியத்தோடு அமைதியாக இரயிலை நிறுத்தியதைக் கேள்வியுற்ற நேரு பண்டிதர், இச்செய்கையை காட்டுமிராண்டித்தனம் என்றால், அலகாபாத்திலும், லட்சுமணபுரியிலும் மாணவர்கள் ரயிலை நிறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தனரே; — கொள்ளை முதலியன ஏற்பட்டதே — அச்செய்கையை என்னவென்று கூற முடியும்?" என்றார்.

பின்னர் இரா. நெடுஞ்செழியன் பேசுகையில், எங்கு சென்றாலும் இவ்வளவு மகத்தான வரவேற்புகள் இருப்பதிலிருந்தே நாட்டில் தி. மு. கழகத்திற்கு மக்களிடத்தில் ஆதரவும், பிணைப்பும் இருக்கிறதா? இல்லையா? என்பதை ஆச்சாரியார் உணர வேண்டுமென்றார்.

மேலும் அவர் பேசுகையில், விஞ்ஞானிகள், கலைஞர்கள், சமூக தொண்டர்கள், கூட்டுறவு இயக்கத்தினர், அறிஞர்கள் இருக்க வேண்டிய இடத்தில் ஆச்சாரியார் இருப்பது நியாயமா? ஜனநாயகமா?" என்று கேட்டார்.

பின்னர், ஈ. வெ. கி. சம்பத் பேசுகையில், ஆச்சாரியாரை முதல் எதிரியும், காங்கிரசின் முதல் எதிரியும், ஜனநாயகத்தின் முதல் எதிரியும் ஆச்சாரியாரே எனக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், "தி. மு கழகத் தலைவர்களை வாயைப் பூட்டிவிட்டு இவர் பவனி வந்தால் தி மு.கழகத்தை ஒழித்துவிட முடியும் என்று குருடு கோககத்தோடுதான் நீவர்கள் கணக்கை தீர்த்துவிடுகிறேன் எனக்குறிப்பிட்டுள்ளார் ஜூலை 15-ல், அமைதியோடு தனது போராட்டத்தைத் துவக்கிய தி மு. கழகத்தில் குறைகள் கண்ட நிபுணன் யார்?" என ஆர்வத்தோடு கேட்டார்.

பின்னர், பொதுச் செயலாளர் அண்ணா பேசத் துவங்கினார்:

"சிறை சென்ற நாங்கள் சிறை சென்ற 5000-க்கு மேற்பட்ட வீரர்களாலேயே வரவேற்கப்படுகிறோம். ஆச்சாரியார் சிறைச்சாலைகளில் எங்களைத் தள்ளி எதிர்காலத்திற்கு வேண்டியவற்றை உருவாக்க வாய்ப்பளித்ததற்கு மிக்க நன்றி.

ஆச்சாரியாரின் அடக்குமுறை தர்பார், அராஜகம், போக்கு இவற்றைக் கண்டால் கூடிய சீக்கிரத்தில் ஆட்சிப் பொறுப்பை நாம் ஏற்கும் நிலை வரும் என்றே நினைக்கிறேன்.

ஆச்சாரியாருக்கு ஆச்சாரியார் எதிரி. அடுத்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸ் ஆட்சி இருக்கவும் முடியாது; இடையவும் இடையாது என்று திட்டவட்டமாகக் கூறுவேன்.

அண்ணா என்ற சொல் ஒவ்வொரு குடும்பத்திலும் பிணைந்திருப்பதைக் காணுகிறோம்; கற்பு பிணைப்பு, எந்த அடக்குமுறை வந்தாலும் தாங்கிக் கொள்ளும்; தடியடி தர்பார், தாய்மார்களை நடுக்காட்டில் விடுதல், கொலைக் குற்றம், ஆயுள் தண்டனை எதுவரினும் தாங்கிக் கொள்ளும்; ஆகவே எங்களுக்கு இருக்கிற பலம், நாங்கள் செல்லும் மார்க்கம் எல்லாம் காணுகின்றபோது, எங்கள் வெற்றி தொலைவில் இல்லை.

உணவும், உழைக்க வேலையும், வேதனை இல்லாமலும், வாழ்க்கையில் மகிழ்ச்சியும், கனிவும் இருக்க அக்கரை கொள்கிறோம். நம் மக்களுக்கு நல வாழ்வு ஏற்பட 'திராவிட நாடு திராவிடருக்கு' ஆகவேண்டும் ஆகவே, மேலும் ஊக்கம் குன்றாது உழைக்க வாரீர். திராவிடநாட்டை அடைந்தே தீருவோம்." என்றார்.

தூத்துக்குடி நாள்

★

6—12—53 ஞாயிறு காலை 9 மணிக்கு
சென்னை அரமனைக்காரன் தெரு கோகலே மண்டபம்
தலைவர்: காஞ்சி மணிமொழியார்
பேச்சாளர்கள்:
சி. பி. சிற்றரசு
காஞ்சி. கல்யாணசுந்தரம்
நடிகர் டி. வி. நாராயணசாமி
,, எஸ். எஸ். ராசேந்திரன்
,, எம். என். கிருஷ்ணன்
நுழைவுக் கட்டணம் அணா 4
முத்தியாலுப்பேட்டை, தி. மு. க.

சென்னை தி. மு. கழக 2-வது மாநாடு

வரவேற்புக் குழு அங்கத்தினர்கள் கூட்டம்.

"சென்னை நேப்பியர் பார்க்கில் நடைபெற்ற மேற்படி மாநாட்டின் வரவேற்புக் குழு அங்கத்தினர்களின் கூட்டம் 6-12-53 ஞாயிறு காலை 8-30 மணிக்கு, இராயபுரம் 'அறிவகத்'தில் நடைபெறும். மாநாட்டின் வரவு—செலவு கணக்கு பரிசிலனை செய்யவேண்டி இருப்பதால், அங்கத்தினர்கள் அனைவரும் தவறாது வரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்" என்று தோழர்கள் ஏ. ஆர். சேஷாசலம், வ. செபசந்திரன் அறிவிக்கின்றனர்.

கருணாநிதி மதுரை வருகை

கல்லக்குடி அறப்போர் வீரர், சிறை சென்று மீண்ட தோழர் மு கருணாநிதி அவர்கள், 13—12—53 ஞாயிறன்று மதுரைக்கு வருகிறார். காலை 10 மணிக்கு புகைவண்டி நிலையத்தில் வரவேற்பும், மாலை 4-30 மணிக்கு கழக அலுவலகத்திலிருந்து ஊர்வலமும், மாலை 6-30 மணிக்கு திலகர் திடலில் மாபெரும் பொதுக்கூட்டமும் நடைபெறும். தோழர்கள் மு. கருணாநிதி, க. இரா. சந்திரசேகரன், பி. ஏ. பி. எல்., இளமுருகு பொற்செல்வி ஆகியோர் பேசுவர்.

அன்று இரவு 10 மணிக்கு, மதுரை செல்லம் தியேட்டரில் புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், எம். ஜி. சக்ரபாணி குழுவினர் நடிக்கும் 'இன்பக் கனவு' நாடகத்திற்கு தோழர் மு. கருணாநிதி தலைமை தாங்குவார்.

வல்லத்தில்

தஞ்சை மாவட்ட வல்லம் தி. மு. கழகச் சார்பில், கல்லக்குடி அறப்போராட்டத் தலைவர் மு கருணாநிதிக்கு 7—12—53 திங்கள் காலை, தி மு. கழகக் கட்டிடத்தில் வரவேற்பளிக்கப்படும்.

மக்கள் சபையில் கேள்வி நேரம்

மக்கள் சபை உறுப்பினர்கள், பல்வேறு சம்பந்தப்பட்ட பொருள்பற்றி கேள்விகள் கேட்கையில், சம்பந்தப்பட்ட இலாகா மந்திரிகள் அளித்த பதில்கள் கீழே தரப்படுகிறது:—

தாமோதர் நதிப் பள்ளத்தாக்கு

"தாமோதர் நதிப் பள்ளத்தாக்குத் திட்டத்துக்காக அனுமதிக்கப்பட்ட முதல் கடன் தொகையாகிய 1,85,00,000 டாலரிலிருந்து, 1953 ஆகஸ்டு 31-ந் தேதி வரையில் 1,40,85,256 டாலர் செலவழிக்கப்பட்டிருக்கிறது"

* * *

லாட்டரிகள், போட்டிகள் மூலம்......

"லாட்டரிகள், குறுக்கெழுத்துப் போட்டிகள் முதலியவைகளுக்காக இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குப் பணம் அனுப்புவதற்கென்று அந்நிய நாணயச் செலாவணி எதுவும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை யென்றாலும், அவை சம்பந்தமாக வெளிநாடுகளுக்குப் பணங்கள் ஓரளவு அனுப்பப்பட்டு வருவது இந்திய சர்க்காருக்குத் தெரியுமென்றும், அந்நிய நாணயச் செலாவணிக் கட்டுப்பாடுகளை மேலும் இறுக்கும்படியான அளவுக்கு இத்தொகைகள் பெருமளவில் அனுப்பப்படவில்லையென்று சர்க்கார் கருதுவதாயும், கட்டுப்பாடுகளை மேலும், இறுக்கினால் விரும்பத் தகாத வேறு விளைவுகள் ஏற்படக்கூடும்."

* * *

ஹைதராபாத்துக்கு மத்திய சர்க்கார் கடன்

"ஹைதராபாத் சர்க்கார் கேட்டுக் கொண்டதன்பேரில், துங்கபத்திரை (பாசன) திட்டம் சம்பந்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நடத்திவைப்பதற்காக 1 கோடி ரூபாய் தொகையை, இந்திய சர்க்கார், அந்த சர்க்காருக்குக் கடனாகப் பற்றெழுதிக் கொண்டு கொடுத்திருக்கிறது."

* * *

கடனாகக் கொடுக்கப்பட்ட அமெரிக்கக் கோதுமைக்கு வட்டி

அமெரிக்கக் கோதுமைக் கடனுக்காக, 1953 ஜூன் 30-ந் தேதியுடன் முடிந்த ஆறுமாத காலம் வரையில் 46,56,736 96 டாலர் வட்டித் தொகைக்காகச் செலுத்தப்பட்டது. இந்தக் கடனுக்கு வட்டி விகிதம் ஆண்டிற்கு 2½ சதவிகிதம்: வட்டித் தொகைகள், வாஷிங்டனிலுள்ள இந்திய சப்ளை கமிஷனின் மிச்சமையிருப்பிலிருந்து டாலர்களாகச் செலுத்தப்பட்டன."

* *

பருத்தி கள்ளக் கடத்தல்

"கிழக்கு வங்காளத்தின் எல்லையோரப் பிரதேசங்கள் சிலவற்றில், இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு பருத்தி நூல்களைக் கள்ளக் கடத்தல் செய்வது சமீபகாலமாக அதிகரித்து வந்திருப்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன."

• • •

வருமான வரி வழக்குகள்

"1952—53-ம் ஆண்டில், ரூ. 25,08 25,029 சம்பந்தப்பட்ட 27,530 வருமானவரி வழக்குகள் சர்க்கார் பாக்கி வசூல் சட்டத்தின் கீழ் வசூல் செய்யப்படுவதற்காக தாக்கல் செய்யப்பட்டன. இந்த ஆண்டில் 1,13,54,960 ரூபாய் சம்பந்தப்பட்ட 4,881 வழக்குகள் பைசல் செய்யப்பட்டன"

முத்தமிழ் இளைஞர் மன்றம்

பாப்பநாய்க்கன்பாளையம், நவ. 30

28—11—53-ல், தோழர் பல்லடம் பொன்னுசாமி தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. மன்ற வருங்கால அக்க வேலைகள் குறித்து தோழர்கள் கோவை இளம் வழுதி, வை, சுப்ரமணியம் ஆகியோர் பேசினர்.

சிறை மீண்டோருக்குப் பாராட்டு

சென்னை, இராயப்பேட்டை தி. மு. கழக 37-வது வட்டத்தின் சார்பில், கல்வித் திட்ட எதிர்ப்பு மறியலிலும், கண்டனக் கூட்டம் நடத்தியும் சிறை சென்று மீண்ட தோழர்கள் கோ இளவரசு, நா. துரைசாமி, கோவிந்தன், கோபால், டி. ஞானசேகரன், த வெற்றிவீரன், ம. கி. இராமலிங்கம், பொ நா. சண்முகம், கெ. கிருட்டிணமூர்த்தி, வி. என். கண்ணன். மு. தாஸ், பி நாகராசன், எ. செல்வம் ஆகிய தோழர்களுக்கு 29—11—53 ஞாயிறு காலை 10 மணிக்கு கழகக் கட்டிடத்தில் எ. சுந்தரம் அவர்கள் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

தலைவர் அவர்களால் சிறை சென்று மீண்ட தோழர்களுக்கு மலர் மாலை அணிவித்தபின், தோழர்கள் வெங்கடாசலம், துரைக்கண்ணு, புரட்சிப்பித்தன், மு. அரங்கநாதன், லிங்கராசன், கோ. இளவரசு, மு. புரட்சிமணி, பொ. ஏழுமலை, வெ. கி. பார்த்தசாரதி ஆகிய தோழர்கள் பாராட்டிப் பேசினர்.

சிறை சென்ற தோழர்கள் அனைவரும் பாராட்டுக்கு நன்றி தெரிவித்து சொற்பொழிவாற்றினர். தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

ஆந்திரத் தலைநகர்

சட்டசபை முடிவு குறித்து சஞ்சீவி ரெட்டி

கர்நூல். டிச. 1—

நேற்று ஆந்திர மாநில சட்டசபையில் தலைநகர் சிக்கல் பற்றி செய்யப்பட்ட முடிவு குறித்து துணை முதலமைச்சர் என். சஞ்சீவி ரெட்டி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இச்சிக்கல் சம்பந்தமாக நவ. 28-ந் தேதியன்று முதலமைச்சர் டி. பிரகாசம் வெளியிட்ட அறிக்கையானது அதிகாரபூர்வமானதாகும் மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் விஜயவாடா, குண்டூர் அல்லது வால்டேரில் தலைநகரை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதுதான் அவ்வறிக்கையின் கருத்து."

காஞ்சியில் உணவுப் பொருள் நிலை

காஞ்சி, டிச. 1—

இந்த அரிசி படி விலை ரூ. 0—15—0 வாக இருந்தது. இப்போது ரூ. 0—14—0 வாகக் குறைந்துவிட்டது. இதையொட்டி இந்நகர் ஹோட்டல்களில் இட்டிலி ரூ 0—0—6 வாகக் குறைக்கப்பட்டது

சோவியத் குடிகள் வெளிநாட்டுக் குடிகளை மணக்க உரிமை

தடை நீக்கப்படுகிறது

மாஸ்கோ, டிச. 2—

ஏற்கனவே 1947 மார்ச் 29-ந் தேதிய கட்டளைப்படி சோவியத் குடிகள் பிற நாட்டுக்குடிகளை மணக்கக்கூடாது என்று இருந்து வந்தது. அந்தத் தடையை சோவியத் சர்க்கார் இப்பொழுது நீக்கிவிட்டிருக்கிறது.

புதிய உத்திரவில், பிறநாட்டுக் குடிகளை மணந்து கொள்வதால் சோவியத் குடிகளின் 'குடி உரிமை' பறிக்கப்படமாட்டாது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, ஜட்ஜ் [illegible] தெரு, [illegible]) வெளியிடப்படுகிறது. [illegible]